Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 27 (11 - 07 - 1991) வியாழக்கிழமை ஓசை: 143

## தோட்ட ஆசிரியருக்கும் இளைப்பாற்று சம்பளம்

(நல்லூர்)

தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்துடையவர்களாக உள்ளார்கள். கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் பிரதேச கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்று நிருபம் பி. என் என்/3 தோட்டப் பாடசாலை ஆசிரியர்களின் சேவைக்காலத்தை இளைப்பாற்றுச் சம்பளத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவில் கடும் மோதல்

## புலிகளின் படை அணிகள் சுற்றி வளைத்துத் தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று அதிகாலை 3.30 மணியில் இருந்து விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் வெடித்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனையிறவு இராணுவ தடைமுகாம், குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு உப்பளம் ஆகிய இராணுவ முகாம் பகுதிகளில் இம் மோதல்கள் நடைபெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் தொடக்கம் சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் விடுதலைப் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ரஜனி

கடந்த 15. 06. 91 அன்று வவுனியா செட்டிக்குளம் இராணுவமுகாமில் இருந்து பூவரசம் குளம் பகுதியை நோக்கி வந்த இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் படுகாயம் அடைந்து வைத்திய சிகிச்சை பெற்று வந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர் ரஜனி (கோவிந்தம் நாராயணன் - மட்டக்களப்பு) நேற்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு மாதாந்தம் 30 கோடி செலவு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அகதிகளுக்கென மாதாந்தம் முப்பது கோடி ரூபா செலவிடப்படுகிறது என புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் 415 அகதி முகாம்கள் உள்ளது என்றும் யாழ் குடாவில் 181 அகதி முகாம்கள் உள்ளது என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

## சிறிலங்கா - பெல்ஜியம் இராஜதந்திர இழுபறி

(லண்டன்)

பெல்ஜிய அரசுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் ராஜதந்திர இழுபறிகள் ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மருதலினா என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சமயம் சிறிலங்கா அரசு கப்பலில் இருந்த வெடி மருந்துப் பொதிகளைப் பறிமுதல் செய்தது தெரிந்ததே.

11,000 றொக்கற் மோட்டர்கள் அடங்கிய பொதிகள் (4ஆம் பக்கம் பார்க்க)

### "வடக்கே செல்கிறோம்"

ஆனையிறவு முகாம் சூழலில் சண்டை நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் சிறிலங்காவின் ரூபவாகினியில் நேற்று "வடக்கே செல்கிறோம்" என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகியது. இராணுவத்தினர் பயிற்சி பெறல் தொடக்கம் பல விடயங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சியில் அதிகம் இடம்பெற்றிருந்தது

## 9 இராணுவம் பலி

நேற்றுக்காலை ஆனையிறவு முகாம் பகுதியில் நடந்த மோதலில் ஒன்பது இராணுவத்தினர் இறந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## தேடிய இராணுவம் மிதிவெடியில் சிக்கியது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபடும்போது ஏழு மிதிவெடிகள் வெடித்துள்ளதாகத் தெரியவருகிறது. (4 ஆம் பக்கம் பார்க்க)

## வான்மீது குண்டு வீச்சு மாடு பலி; படுகாயம்

(கொடிகாமம்)

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானம் ஒன்று எழுதுமட்டுவாழ்பகுதியில் கண்டி வீதியால் வந்த வான் ஒன்றின் மீது திடீரெனத் தாக்குதலை நடாத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் முகமாலைக்கும், எழுதுமட்டுவாழுக்கும் இடையில் கண்டிவீதி வழியாக வந்து கொண்டிருந்த வான் மீதே இவ்விமா (4ஆம் பக்கம் பார்க்க)

## அநாதரவான நிலையில் துருக்கியில் 31 இலங்கையர்

(லண்டன்)

அடையாளம் தெரியாத கப்பல் ஒன்றின் தலைமை மாலுமி நாற்பத்தியாறு ஆசிய நாட்டவர்களை துருக்கிய நாட்டின் கடற்கரைப் பட்டினம் ஒன்றில் இறக்கி விட்டுச் சென்றுள்ளார்.

இவ்வாறு இறக்கி விடப்பட்டவர்களில் முப்பத்தியொரு பேர் இலங்கையர்கள் என்றும் எட்டுப்பேர் இந்தியர், ஏழுபேர் வங்காளிகள் என்றும் துருக்கிய இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் புலிகள் விசாரணை ஆரம்பம்

வடபகுதி புலிகளின் நடவடிக்கைகள் எந்தளவிற்கு மலையகத்தில் ஊடுருவி உள்ளன என்று கண்டறியும் முயற்சிகளில் சிறிலங்காவின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மலையகத்தில் கைதான அரசியல் தலைவர்கள் சிலர் பல முக்கிய தகவல்களை தெரிவித்ததையடுத்து பொலிஸார் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

## வரதனின் இடத்திற்கு கருணா நியமனமாம்

(கொழும்பு)

கொழும்புநகரில் விடுதலைப் புலிகளின் தலைவராகச்செயல்பட்டு வந்த வரதன் மரணமானதைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு கிழக்குப் பிராந்தியப் பொறுப்பாளர் கருணா நியமிக்கப்பட்டுள்ளார் என சிறிலங்கா பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர் தமிழீழ விடுதலைப் புலி (4ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற் போனவர் பற்றி சிறிலங்கா அசட்டை

### சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு உண்டு எனக் கூறப்பட்டு சுமார் ஒன்பது ஆயிரம் பேரை சிறிலங்கா அரசு தடுத்து வைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1990 / 91 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் மேலும், தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள அரசுகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவது சர்வ சாதாரணமாகிப் போயுள்ளது எனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிலை பற்றி விபரமாக விபரித்திருக்கும் இவ் அறிக்கை பெரும்பான்மைச் சிங்களவர்களி (4ஆம் பக்கம் பார்க்க)

## காலவரையற்ற ஊரடங்கு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுக் காலை, ஆறு மணி முதலும், வவுனியா தெற்கு, வவுனியா நகரம் ஆகியன தவிர்ந்த வவுனியா மாவட்டப் பகுதிகளில் நேற்று மாலை ஆறுமுதலும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படுவதாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை செயலகம் கூறியுள்ளது.

## சிறிலங்கா இராணுவத்திடம் நிதானம் இல்லை

### -லெம்னட்போல்ட்

(லண்டன்)

சிறிலங்கா இராணுவம் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இதுவரையில் அது அப்படிச் செய்யவில்லை. என பிரிட்டன் வெளியுறவு அலுவலக அமைச்சர் லெம்னட் போல்ட் பி.பி. சிக்கு வழங்கிய பேட்டியொன்றில் கூறியுள்ளார்: அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில் சிறிலங்கா அரசுக்கு ஜே. வி. பி யினரிடம் இருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்தும் நெருக்குதல்கள் இருக்கின்றன என்பது உண்மையே ஆயினும் மனித உரிமை மீறல் விவகாரம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிணறுகளில் பிணநாற்றம்

(மட்டக்களப்பு)

செங்கலடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த காலங்களில் செயலால் இடம் பெயர்ந்து அண்மையில் மீளக் குடியமரச் சென்ற வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்கள் வீட்டுக் கிணறுகளில் பிண நாற்றம் வீசுவதாக செங்கலடி உதவி அரசாங்க அதிபரிடம் புகார் செய்துள்ளனர்.

## ஹெலி தாக்குதல்

(கட்டுவன்)

கட்டுவன், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளை நோக்கி சிறிலங்கா விமானப்படையினரின் ஹெலிகொப்டர் ஒன்று கடந்த இரு தினங்களாக கலிபர் தாக்குதல் நடாத்தியுள்ளது.

இத்தாக்குதலில் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## வெளியே செல்ல புதிய நிபந்தனை

(நமது நிருபர்)

வடபகுதிக்கு வெளியேசெல்வதற்கான அனுமதி தொடர்பாகப் புதிய விதிமுறைகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன, போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய விதிமுறைகள் சமநாதத்தில் வெளிவரவுள்ளன.

## வரிசைமப்பரம்

**தவறிவிட்டது**

02 ER 4311 எனும் இலக்கத்தையுடைய ஈஸ்ரேன் ரக துவிச்சக்கர வண்டி நாவற்குழிச் சந்திக்கும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கும் இடையில் வீதியில் இருந்து தவறி விழுந்து விட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல் ஐ. பிரபாகரன். (R/ 1529)

**தவறிவிட்டன**

மோ. அகிலன் ஆகிய எனது 680380139X இலக்க தேசிய அடையாள அட்டையும் மருத்துவபீட அடையாள அட்டையும் வேறு சிலவற்றுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் 9-7-91ல் தவறிவிட்டன.

இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் அலுவலகத்திலோ மருத்துவ பீடத்திலோ, யாழ் வைத்திய சாலை நலன்புரிச்சங்கத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/1532)

## "வித்தியானந்தன் நூலகம்"

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நூல் நிலையத்திற்கு புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

"வித்தியானந்தன் நூலகம்" என்ற பெயர் தற்பொழுது சூட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பேரவையில் மேற்கொண்ட முடிவிற்கிணங்க மேற்படி பெயர் சூட்டப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பதிவாளர் ஒருவர் தெரிவித்தார். (ச)

## இலட்சார்ச்சனை

(பருத்தித்துறை)

அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று 11ஆம் திகதி இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது. நேற்று கணபதி ஹோமம் விசேடபூசை, நவக்கிரக ஹோமம் என்பன இடம் பெற்றன. (25)


# A/L 92

## தாவரவியல்

**திரு. பொ. ஐங்கரநேசன்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

14 - 7 - 91 (ஞாயிறு)

காலை 6-7 தாவர உடற்றொழிலியல்
காலை 7-8 தாவர இராச்சியத்தின் பிரிவினைகள்
பிற்பகல் 2-3 தாவர உடலமைப்பியல்

## யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/2797)


ஊர்காவற்றுறை துயர் துடைப்புச் சங்கம்

## விசேட பொதுக் கூட்டம்

இடம்: யா / புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்.

காலம்: 21-07-1991ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி


நிகழ்ச்சிநிரல்:

(1) இறைவணக்கம்
(2) (அ) தலைமையுரை அருட்திரு கிருபானந்தன் அடிகளார்
(ஆ) சிறப்புரை (த. வி. பு. ம மு. உறுப்பினர்)
(3) வரையண்டு அறிக்கை
(4) கணக்கறிக்கை
(5) யாப்பு அங்கீகரித்தல்
(6) புதிய செயற்குழு தெரிவு
(7) வேறுவிடயங்கள்

சங்கப் பொதுச்சபை அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(R-1525) உபசெயலாளர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப்டினன்ட் மாவி

(பாலசிங்கம் பரமானந்தம்)

தோற்றம்: 3 - 10 - 1968 மறைவு: 11 - 7 - 1990

சொந்த மண் மீட்க
சொகுசான வாழ்வுதனை
பிஞ்சிலே துறந்து
புலிப்படை சேர்ந்து
விடுதலை உணர்வை
விதைத்திட்ட மாவி
உன் வீரமரணம்
தமிழீழத்தின் விழுப்புண்
எதிரிகளின் பாசறைகள்
தேடித் திரிந்தாய் மாவி
இராணுவ முகாமெல்லாம்
தரைமட்ட மாக்கினாய்
கொக்காவில் இராணுவ
முகாம் வெற்றிக்காக
சாவை அணைத்து
சரித்திரம் படைத்தாய் மாவி!
வரலாறு காக்கும்
மாவீரனாக
உன்னைப் பெற்றெடுத்த
வன்னி வளநாடு
தலை நிமிர்ந்து நிற்கிறது!


11-7-1990 அன்று கொக்காவில் முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்தவர்

மாவி வீதி,
யோகபுரம்,
வவுனிக்குளம்.

உன்பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்,

(R-1507)

## நினைவு கூருகின்றோம்...



1991-07-11

### தோமஸ்

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய

✱ **நியாஸ்** (மன்னார்)

பருத்தித்துறை முகாம் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**தோமஸ்** (தர்மலிங்கம் ரதீஸ்வரன் - கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு மன்னார், தள்ளாடி முகாம் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

வல்வெட்டித்துறை, நெடியகாட்டுப் பிள்ளையார் கோயிலருகில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கணவன், மனைவி, மூன்று வயதுக் குழந்தை ஆகிய 3 தமிழர்கள். வல்வெட்டித்துறை, வேரவில் பிள்ளையார் கோயிலருகில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலினால் கொல்லப்பட்ட சில தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு கொக்காவில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின், 2 ஆம் நாள் போரின் போது வீரமரணமெய்திய

**வினோத்** (கணபதிப்பிள்ளை மனோகரன் - தென்னை மரவடி, திருக்கோணமலை)

**கப்டன் பாபு** (உதயகுமார் - ஆச்சிகுளம், நானாட்டான்)

**லெப். ஜெயா** (மணியம் ரவி - கண்டாமீகுளம், வவுனியா)

**லெப். நிலான்** (நாகலிங்கம் பரமேஸ்வரன் - 156, சிவன் வீதி, வட்டக்கச்சி)

**தவம்** (அந்தோனிப்பிள்ளை புவனேஸ்வரன் - நாவாந்துறை)

குறிஞ்சாத்தீவில் சிறிலங்காப் படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**குணா** (நடராசா ராஜராஜேந்திரன் - 543, இராமநாதபுரம், கிளிநொச்சி)

முள்ளியவளை மாமூலையில் ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த

**ஆழ்வார்** (மா. யோகராசா)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காப் படையினரால் மூழ்கடிக்கப்பட்ட படகில் சென்ற பெண் குழந்தைஉட்பட 21 தமிழர்கள்

வாகரையில் சிறிலங்காப் படையினரின் விமானக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட 2 குழந்தைகள், 2 பெண்கள் உட்பட 6 தமிழர்கள்

சிறிலங்காக் கடற்படையினரின் கைக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட நயினாதீவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

✱ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் நியாஸ் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

(B/2796) - விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

# சிறிலங்கா - பிரிட்டன் உறவு

### சிந்தனைக்கு

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு.

— திருவள்ளுவர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 11.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

## சிறிலங்காவின் தவறான கணிப்பு

பிரிட்டிஷ் தூதுவர் கிளாஸ்ரோன் வெளியேற்றப்பட்டதால் சிறிலங்கா பிரிட்டிஷ் உறவு பாதிக்கப்படவில்லை, சிறிலங்காவிற்கான உதவிகளை பிரிட்டன் முற்றாக நிறுத்திவிடவுமில்லை, உதவிவழங்கும் நாடுகள் இவ்விவகாரத்தை பெரிதுபடுத்திக்கொண்டு ஆராயப் போவதுமில்லை, வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் 'பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையும்' இனால் பாதிக்கப்படப்போவதுமில்லை' என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும், அமைச்சரவைப் பேச்சாளருமான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இது கண்டனங்களில் இருந்து தப்புவதற்கும், சிறிலங்காவின் இராஜ தந்திரத்திற்கு ஏற்பட்ட தோல்வியை மறைப்பதற்குமான நடவடிக்கையே ஒழிய உண்மையல்ல. பெரிய அளவிலான சிறிலங்காவிற்கான உதவியை நிறுத்துவதென்றும், ஆயுத விற்பனையில் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதென்றும் பிரிட்டன் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இரு உலக நாடுகள் தமது இராஜீக உறவுகளை ஆரம்பிக்கும்போது மேற்கொள்ளும் ஆரம்ப நடவடிக்கைகளாக அமைவது கலாசார தூதுக்குழுக்களின் விஜயங்களாகும். இவ்வாறான கலாசாரக் குழுக்களின் விஜயங்களைக்கூட பிரிட்டன் நிறுத்தியுள்ளபோது உறவில் பாதிப்பு ஏற்படவில்லை என்று குறிப்பிடுவது ஒரு ஏமாற்று நடவடிக்கையாகும். அத்தோடு பிரிட்டன் மகாராணியாரின் பிறந்த நாளை கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதுவராலயத்தில் கொண்டாட வேண்டாம் என பிரிட்டன் வெளித்துறை அமைச்சு தீர்மானித்ததில் இருந்தே பிரிட்டன் கிளாஸ்ரோன் விவகாரத்தை எந்தளவிற்கு முக்கியமான விடயமாகக் கொண்டுள்ளது எனப் புரிந்துகொள்ளலாம்.

மேலும், சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளில் ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள் முக்கியமானவையாகும். இந்நாடுகள் கிளாஸ்ரோன் விவகாரத்தில் 'சிறிலங்கா நடந்துகொண்டது ஏற்புடைய முறையல்ல' எனத் தெரிவித்து அறிக்கை விட்டுள்ளன. இந்நிலையில் உதவி வழங்கும் நாடுகளை இவ்விவகாரங்கள் பாதிக்காது. இவ்விவகாரத்தை அவை பொருட்படுத்தமாட்டாது என்பது உண்மைக்குப் புறம்பான கூற்றாகும்.

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகநாடுகள் தற்பொழுது உலக விவகாரத்தில் ஒரு பொதுக் கருத்து அடிப்படையிலேயே செயற்பட்டுவருகின்றன. முன்னாள் பிரிட்டன் பிரதமர் மார்க்கிரட் தட்சர் காலத்தில் ஐ.பொ. சமூகத்தின் ஏனைய நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் சிறிதளவு முரண்பாடு இருந்திருப்பினும் தற்போதைய பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயரினால் அவ்வுறவில் நெருக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், உதவிவழங்கும் நாடுகள் கிளாஸ்ரோன் விவகாரத்தை கருத்திற் கொள்ளப் போவதில்லை என்பது சிறிலங்காவின் ஏமாற்று நடவடிக்கையாகும்.

ஆனால், பிரிட்டிஷ் தூதுவர் கிளாஸ்ரோன் விவகாரம் இவ்வளவு கடுமையான விவகாரமாக இருக்கும் என சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை, ஒரு கண்டனத்துடன் நின்றுவிடக்கூடிய ஒரு விவகாரமாகவே சிறிலங்கா கருதியது.

மனித நேய ஸ்தாபனங்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள், சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளை வெளியேற்றுதல், தடை செய்தல், அவற்றின் கண்டனங்களை பொருட்படுத்தாது விடுதல் போன்றவற்றில் பழகிப் போய்விட்ட சிறிலங்கா அரசாங்கம் இதை ஒத்த விவகாரமாகவே இதையும் கருதியது.

ஆனால், இவ்விவகாரம் பிரிட்டிஷ் அரசின் கௌரவத்துடன் தொடர்புடைய பிரச்சினை என்பதை சிறிலங்கா எண்ணவில்லை. சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் கூறியதுபோல பிரிட்டனின் எதிர் நடவடிக்கையால் விளைவுகளை எதிர்பார்த்தே சிறிலங்கா நடவடிக்கை எடுத்திருக்குமாயின் பிரிட்டன் தற்பொழுது எடுத்துள்ள நடவடிக்கைகளை சிறிலங்கா மறைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பிரிட்டனின் நடவடிக்கைகளை மறைக்க முற்படுவதில் இருந்து சிறிலங்கா தனது தோல்வியை / 'தவறை' மறைக்க முற்படுகின்றது என்றே எண்ண வைக்கின்றது.

## பாதிப்படையவில்லை-பிரட்மன்

(கொழும்பு)

"பிரித்தானிய தூதுவர் டேவிட் கிளாஸ்ரோன் சிறிலங்காவில் இருந்து வெளியேற்றப்பட்டதால் இலங்கை-பிரித்தானிய உறவு பாதிப்படையாது என்றும், இலங்கைக்கான உதவிகளை பிரித்தானியா முற்றாக நிறுத்திவிடவும் இல்லை என்றும் உதவி வழங்கும் நாடுகள் இந்த விவகாரத்தை பெரிதுபடுத்தி ஆராயப் போவதும் இல்லை" என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும், மந்திரிசபை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர்கள் இத்தகைய நடவடிக்கைகளினால் வடக்-குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் பாதிக்கப்படப் போவதில்லை என்றும் தெரிவித்தனர்.

கிளாஸ்ரோன் விவகாரம் தொடர்பாக இலங்கைக்கான பிரித்தானிய உதவிகள் நிறுத்தப்பட்டதாக வெளிவந்த செய்தி உண்மையில்லை என்று தெரிவித்த பிரட்மன் புதிய பிரித்தானிய தூதுவர் இலங்கை வந்து பதவியேற்கும் வரை புதிய பாரிய உதவித்திட்டங்களில் பிரித்தானியா ஈடுபடப் போவதில்லை என்று தெரிவித்தார்.

கிளாஸ்ரோன் விவகாரம் தொடர்பாக பிரித்தானியா ஏதோ ஒரு வகையில் எதிர் நடவடிக்கை எடுக்கும் என்றும் ஆனால் அப்படி எதுவும் நடக்காமல் இருந்தால் நாம் சந்தோஷமடைந்திருப்போம் என்றும் பிரட்மன் தெரிவித்தார்.

புதிய பிரித்தானிய தூதுவர் விரைவில் இலங்கைக்கு வருவார் என்றும், அதன்பின் மனிதஉரிமைகள் மற்றும் விவகாரங்களின் அடிப்படையில் பிரித்தானிய உதவிகள் பற்றி ஆராயப்படும் என்றும் பிரட்மன் தெரிவித்தார்.

## தகனத்திற்கு விறகு வழங்க இல. செஞ்சிலுவை மறுப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பராமரிப்பில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் தங்கியிருந்து மரணம் அடைந்தவரின் சடலத்தை தகனம் செய்வதற்கு வேண்டிய விறகை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மறுத்துள்ளது.

அரியாலை பூம்புகாரில் அமைந்துள்ள மேற்படி அகதி முகாமிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு தங்கியிருந்த ஒருவர் மரணமடைந்தார்.

இவரின் உடலைத் தகனம் செய்வதற்கு விறகு தருமாறு உறவினர்கள் இலங்கை செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திடம் கோரியபோது நாம் உங்களுக்கு விறகு தருவதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுமதிக்க மாட்டாது என்று மேற்படி சங்கத்தின் செயலாளர் முற்றாக மறுப்புத் தெரிவித்து விட்டதாக இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய உயர் அதிகாரி இவ்விடயம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் தமது இணையத்தின் விதிகளின்படி அகதிமுகாம்களுக்கு பொறுப்பாக இருக்கும் அந்தந்த அரச சார்பற்ற நிறுவனங்களே அம்முகாமில் தங்கியிருப்பவர்களின் நலன்களைக் கவனிக்க வேண்டும் என்றார்.

### அம்பாறைமாவட்டத் தமிழர்கள்

## வீடுகள் அழிக்கப்பட்டதனால் திரும்ப முடியா நிலை

(அம்பாறை)

இராணுவ நடவடிக்கைகளினால் வீடு, வாசல்கள் முற்றாக அழிக்கப்பட்டதனால் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது என அம்பாறை மாவட்டத் தமிழ் அகதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்தகால சிங்கள இராணுவ அட்டூழியங்களினால் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 5491 தமிழ்க்குடும்பங்கள் தமது சொந்த வீடு வாசல்களை விட்டு அகதிகளாக அகதிமுகாம்களில் தங்கியுள்ளது தெரிந்ததே.

இவர்கள் தங்கள் வீடுகள் இராணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் தமது கிராமங்கள் சுடுகாடு போல் காட்சி அளிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். தாம் அங்கு போய் இருப்பதற்கு வீடுவாசல்கள் இல்லை எனவும் தகுந்த பாதுகாப்பும் இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

## பிரிட்டன் - பிரான்ஸ் புகையிரத சேவை

(லண்டன்)

பிரித்தானியாவையும், பிரான்ஸையும் இணைக்கும் சுரங்கப்பாதைவழியான ரயில் சேவை 1993 இல் இருந்து ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கியமான வேலைகள் முடிந்துள்ள இந்த நேரத்தில் தண்டவாளம், சிக்னல் லைட்டுகள், பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டியுள்ளன.

முப்பது மைல் நீளமான இந்தச் சுரங்கப்பாதையில் ரயில் சேவை வேலைகள் பூர்த்தியானதும் முதல் வருஷத்திலேயே 28 கோடி பிரயாணிகளையும் 16 கோடி தொன் பொருள்களையும் எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும் என்று கூறப்படுகிறது

## ஆயுத செலவினங்களைக் குறைக்க வேண்டுகோள்

(நியூயோர்க்)

ஆயுதங்களுக்கான செலவினங்களைக் குறைத்து அந்தப் பணத்தை சமூக, பொருளாதார சேவைகளுக்கு ஒதுக்குமாறு சர்வதேச நாணய நிதியம் உலக நாடுகளை கேட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைப் பணிப்பாளர் ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூக சபைக் கூட்டத்தில் கருத்து வெளியிடுகையில் சர்வதேச பதற்ற நிலை குறைந்திருப்பதன் காரணமாக கைத்தொழில் நாடுகளும் வளர்முக நாடுகளும் அவற்றின் இராணுவ செலவினங்களை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உலக நிதியில் சேமிப்பு நிதி பற்றாக் குறை இருப்பதாகக் கூறிய அவர் கூட்டு நடவடிக்கைகள் மூலம் அநாவசியமான செலவினங்களை கட்டுப்படுத்தினால் மட்டும் இந்த நிலைக்குப் பரிகாரம் காண முடியும் எனத் தெரிவித்தார்.

இதே நேரம் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையொன்றில் இராணுவ செலவினங்களினால் பலனேதும் கிடைக்கவில்லை என்று கண்டனம் தெரிவித்துள்ளதோடு சமூக பொருளாதார நடவடிக்கைகளுக்கு மிகவும் தேவைப்படும் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்கள் இராணுவ செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகிறன என்றும் குறிப்பிட்டுள்ளது.

## யுரேனிய செறிவூட்டலில் ஈராக் விஞ்ஞானிகள் வெற்றி

(பாக்தாத்)

அணுகுண்டு தயாரிக்க மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை தமது நாட்டின் விஞ்ஞானிகள் உற்பத்தி செய்யமுடிந்திருப்பதாக ஈராக் தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் ஐ.நா. பாதுகாப்புச்சபை மற்றும் வியன்னாவிலுள்ள அணுசக்தி ஏஜென்ஸியிடமும் ஈராக் ஒப்படைத்த முப்பது பக்க ஆவணமொன்றில் அணுசக்தி வசதிகள் பற்றிய பட்டியலொன்றை வெளியிட்டிருப்பதாக ஈராக் கூறியுள்ளது

செறிவூட்டிய யுரேனியம் தயாரிப்பதற்காக கிடைக்கப்பெற்ற மூன்று வழிமுறைகள் பற்றியும் தாம் நன்கு அறிந்திருப்பதாக ஈராக் அந்த ஆவணத்தில் கூறியிருக்கிறது.

இதேநேரம் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் போர் நிறுத்தம் குறித்த தீர்மானத்தை ஈராக் ஏற்கவில்லை என்பதை இந்த ஆவணம் எடுத்துக் காட்டுவதாக அமெரிக்க ஜனாதிபதி மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## கேரளாவில் கடும்மழை; 99 பேர்பலி

(திருவனந்தபுரம்)

கேரளமாநிலத்தில் பெய்த கனத்த கடும் மழையாலும், வெள்ளத்தாலும் இதுவரை 99பேர் உயிரிழந்துள்ளனர் என்று பி.ரி.ஐ செய்தி கூறுகிறது. மேலும் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் சுமார் இருநூற்றைம்பது கோடி ரூபாய் பெறுமான சாகுபடி சேதமடைந்துள்ளதாகவும், வருவாய்த்துறை அமைச்சர் மணி மாநில கேரள சட்டசபையில் கூறியுள்ளார்.

# மீனவர்கள் பாதுகாப்பிற்கே மீன்பிடிக் கட்டுப்பாடு

**- ஜெயலலிதா**

(சென்னை)

தமிழக மீனவர்களுக்கு கடலில் மீன் பிடிப்பதற்கு தமிழக அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் பீற்றர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழக சட்டப் பேரவையில் இதனைத் தெரிவித்த அல்போன்ஸ் இந்தக் கட்டுப்பாடுகளால் இராமேஸ்வரத்தில் 10 000 மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் கடலோர காவற்படை உதவியுடன் குறிப்பிட்ட இடங்களில் மீன் பிடிக்க இவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதில் அளித்துப் பேசிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நமது கடற்பகுதிக்குள் மீன் பிடிக்கலாம் என்றும் இந்திய - இலங்கை கடல் எல்லையை புரிந்து கொள்ள முடியாமல் இருந்ததால் இலங்கை கடற்பகுதியில் மீன் பிடிக்கும் நமது மீனவர்கள் அந்நாட்டு கடற்படையினரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதால் இவர்களுக்கு உதவும் வகையில் தான் அரசின் ஆணை உள்ளதாகத் தெரிவித்தார்.

## புவியியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புவியியற் கழகத்தினரின் ஆறாவது புவியியற் கருத்தரங்கு இன்று மாலை 3 மணிக்கு புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றைய கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் செ பாலச்சந்திரன் ''உயிர் சூழலியற் சமநிலையைப் பேணுதல்'' பற்றி உரை நிகழ்த்துவார். (ச)

## பெற்றுக் கொள்ளவும்

மண் மீட்பு நிதிக் தொடர்பகத்தில் ஒரு மோதிரம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் மாவட்டச் செயலகத்தில் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

# இரு ஐரிஸ் கெரிலாக்கள் சிறையிலிருந்து ஓட்டம்

(லண்டன்)

பாதுகாப்பு மிக்க லண்டன் சிறையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு ஐரிஷ் குடியரசுப் படைத் தீவிரவாதிகள் தப்பி ஓடியுள்ளனர்.

இவ்விரு தீவிரவாதிகளும் தமது சப்பாத்தில் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியைக் காட்டி அதிகாரிகளை மிரட்டியபின் மதிலேறிக் குதித்துத் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது இவர்கள் அவ்வழியே வந்த வாகனம் ஒன்றை மறித்து அதன் சாரதியின் காலில் சுட்டுவிட்டு அந்த வாகனத்திலேறித் தலைமறைவாகி விட்டதாக தெரியவருகிறது. இச்சிறைக்கைதிகளுக்கு எவ்வாறு ஆயுதம் கிடைத்தது என்பது பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தீவிரவாதிகள் தப்பிச் சென்ற விடயம் லண்டன் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

அன்னை பூபதி

# பொது அறிவுப் போட்டி மாவட்டரீதியான முடிவுகள்

யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வடதமிழீழத்தில் கடந்த ஏப்ரல் மாதம் பன்னிரண்டாம் திகதியன்று நடாத்திய அன்னை பூபதிநினைவுப் பொது அறிவுப்போட்டியில் மாவட்டரீதியாக மேற்பிரிவிலும் கீழ்ப் பிரிவிலும் அதிக புள்ளிகள் பெற்ற பரிசிலுக்குரிய மாணவர்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன

★ மன்னார் மாவட்டத்தில் மேற்பிரிவில் பூநகரி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கு. சிவகுமாரும், கீழ்ப்பிரிவில் விடத்தல்தீவு றோ. க. த. க. பாடசாலையைச் சேர்ந்த சி. நெறிசும்

★ வவுனியா மாவட்டத்தில் மேற்பிரிவில் கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பொ. ஞானப்பிரகாசம் ஞானசீலனும், கீழ்ப்பிரிவில் அதே பாடசாலையைச் சேர்ந்த தனபாலசிங்கம் தர்சினியும்

★ மணலாறு மாவட்டத்தில் மேற்பிரிவில் அளம்பில் க. உ. வித்தியாசாலையைச் சேர்ந்த வி. வசந்தியும், கீழ்ப் பிரிவில் குமுழமுனை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இ. புனிதவதியும்

★ முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற் பிரிவில் ஒட்டிசுட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சி. துஷ்ஜினியும் கீழ்ப்பிரிவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியைச்சேர்ந்த பெ மேரி றெஜினாவும்

★ கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்பிரிவில் மல்லாவி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவதர்ஷினியும் கீழ்ப்பிரிவில் பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த நிர்மலநாதன் சமுர்தனும்

★ யாழ் மாவட்டத்தில் மேற்பிரிவில் யாழ் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சு. சுபாகரனும், கீழ்ப்பிரிவில் இதே கல்லூரியைச் சேர்ந்த பு செந்தில்குமரனும் அதிகூடிய புள்ளிகள்பெற்று பரிசிலுக்குரிய மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கோட்டரீதியான முடிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன

வரதராஜப்பெருமாள்

# வீட்டிற்குள் புகமுயன்றவர் கொலை செய்யப்பட்டார்

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் தங்கியிருக்கும் வீட்டினுள் புகமுயன்று கைதுசெய்யப்பட்ட வேரேஸ் குரு என்பவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மத்தியப் பிரதேசத்தின் சந்தேரிக் கோட்டைக்குள் இருக்கும் வரதராஜப்பெருமாளின் வீட்டிற்குள் புகமுயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட வேரேஸ் குரு என்பவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் போபால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்றும் பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்ட அன்றே கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் அர்ராம்பாய் பெருந்தெருவில் கடந்த மாதம் 26 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# சபாநாயகராக காங்கிரஸ் சிவராஜ் பாட்டீல் தெரிவு

(புதுடில்லி

இந்திய லோக்சபாவின் புதிய சபாநாயகராக இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. சிவராஜ் பாட்டீல் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாரதியஜனதாவும், ஜனதாதளமும் சபாநாயகர் போட்டியிடப்போவதாக கூறியிருந்தபோதும் ஐம்பத்தியாறு வயதான திரு. சிவராஜ் பாட்டீல் சபாநாயகராக ஒருமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

திரு, சிவராஜ் பாட்டீல் மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத்தின் துணை சபாநாயகராகவும், சபாநாயகராகவும் முன்னர் கடமையாற்றியவர். என்பதோடுமுன்னைய மக்களவையில் துணை சபாநாயகராகவும்பல்வேறு துறையில் மத்திய இணை அமைச்சராகவும் பணியாற்றியவர் ஆவார்.

சிறிலங்கா

பெல்ஜியத்திலிருந்து நைலான் விமானப்படைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டவை, அவற்றைப் பற்றி சிறிலங்கா அரசு தரப்பில் நியாயம் எதுவும் இல்லை என்று பெல்ஜியம் குற்றம் சாட்டியுள்ளது.

வரதனின்

களின் இராணுவப் பிரிவு முக்கியஸ்தரான இவரைத் தேடிக்கண்டு பிடிப்பதில் சிறிலங்காப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் தற்போது கொழும்பில் தங்கியுள்ள இவரால் எந்த நேரத்திலும் பாரிய அசம்பாவிதங்கள் நடாத்தப்படலாம் என அஞ்சி சகல பொலிஸ் நிலையங்களும் பாதுகாப்பு பிரிவினரும்உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

வீரவணக்கம்

அதிகாலை 3 00 மணிக்கு வீரமரணத்தை தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

ஆனையிறவில்

புலிகளின் இலக்குகள் மீது பலத்த குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இந்நிலையில் நேற்று அதிகாலை 3 30 மணியிலிருந்து விடுதலைப் புலிகள் இராணுவ முகாம்களை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்: இப் பீரங்கித் தாக்குதல் நேற்று மாலை வரையும் நீடித்தது.

அதேவேளை இம்முகாம்களை முற்றுகையிட்ட விடுதலைப்புலிகளின் படை அணிகள் நேற்று மாலை முகாம்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டன. இச் செய்தி அச்சுக்கும் போகும்வரை முகாம்களில் கடும்மோதல்கள் இடம்பெற்ற வண்ணம் இருப்பினும் சேதவிபரங்கள் எதுவும் தெரியவரவில்லை,

அதேவேளை இம் மோதலை உறுதிப் படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள், ஆனையிறவு முகாமைப் பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்துவதாகவும், புலிகளிடம் முகாம் வீழ்ச்சி அடைவதைத் தடுப்பதற்காக விமானப்படை விமானங்களும் உலங்கு வானூர்திகளும் புலிகளின்நிலைகள் மீதுகடும்தாக்குதலை மேற்கொள்வதாகவும் தெரிவித்தன.

வான்மீது

ளத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது.

விமானத்தில் இருந்து வீசப்பட்ட குண்டு வாகனத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்த போதிலும் பயணிகள் உடனடியாக பாதுகாப்பான இடத்தில் பதுங்கியமையால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் இத்தாக்குதலில் அருகில் கட்டப்பட்டிருந்த மாடொன்று அவ்விடத்திலேயே பலியாகியதுடன் மேலும் இரு மாடுகள் காயமடைந்துமுள்ளன. (86)

அநாதரவான

இவர்கள் இத்தாலியில் அல்லது கிரீசில் தஞ்சம் புகவிரும்பினர் என்றும் ஆனால் இவர்கள் அருகியில் இறக்கிவிடப்பட்டுள்ளார்கள் என்றும் தெரியவருகிறது.

இறக்கி விடப்பட்ட ஆசியர்கள் கடந்த நாலுவாரமாக ரொட்டி மட்டுமே உணவாகக் கப்பல் மாலுமிகள் தந்ததாகவும், பயண ஆவணங்கள் உட்பட மதிப்புமிக்க பொருள்கள் கப்பல் சிப்பந்திகளினால் களவாடப்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளனர்.

காணாமற்

டையே காணாமல் போனவர்கள் பற்றியும், சட்டத்திற்கு புறம்பான வகையில் கொல்லப்பட்டவர்கள் பற்றியும் பிரஸ்தாபித்துள்ளது. காணாமல் போனவர்கள் கொல்லப்பட்டோர் பற்றி அரசு அசட்டையாகவும், எதுவித விசாரணையும் மேற் கொள்ளாமல் இருப்பது பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, மேலும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அரசின் இராணுவ நடமாட்டம் உள்ள பகுதிகளில் மக்கள் சித்திரவதைப் படுவதைப் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேடிய

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் நிலாவெளி பத்தாம் கட்டை, கும்புறுப்பிட்டி, குச்சவெளி, விக்கம் கிகாரை ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கும்புறுப்பிட்டி குச்சவெளிக் காடுகளில் தேடுதல் வேட்டை மேற்கொண்டனர்.

கடந்த செவ்வாயன்று இராணுவத்தினர் தேடுதல் மேற்கொண்ட போது கும்புறுபிட்டி மரவாடியில் ஐந்து மிதி வெடிகள் வெடித்துள்ளதாகவும் கடந்த திங்களன்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது குச்சவெளியில் ஒரு மிதி வெடியும், கும்புறுப்பிட்டியில் ஒரு மிதிவெடியும் வெடித்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவ

களில் பிரிட்டன் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் எனக் குறிப்பிட்டார். இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட டேவிட் கிளாஸ்ரோன் இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிட்டதாக கூறுவதை பிரிட்டன் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் இலங்கையில் பிரிட்டனின் நலனைக் கவனிக்க புதிய தூதுவர் விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தோட்ட ஆசிரியருக்கும்

துடன் கணக்கிடப் படுவதற்கும், இளைப்பாற்றுச் சம்பள உரிமையைப் பெறுவதற்கும் வழி செய்கிறது.

தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் சம்பந்தமாக 1-11 89 இல் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பாடசாலைகளின் சேவையில் இருந்து தொடர்ந்து நியமனம் பெற்ற தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கப்படும்.

இளைப்பாற்றுச் சம்பளத்துக்கு உரித்துடைய ஆசிரியர்கள் நியமனம் பெற்றுப் 10 வருட சேவை முடிவதற்குமுன்னர் சேவையிலிருந்து விலகியிருந்தால், அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு முந்திய காலத்தை சேவைக்காலத்துடன் சேர்த்துக் கொள்வதற்கும், இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் உரித்துடைமை பெறுகிறார்கள்.

இது தொடர்பான விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களம் அனைத்து கோட்டக்கல்வி அதிகாரிகளையும் ஜூலை 2ஆம் திகதி அனுப்பியுள்ள அதன் சுற்று நிருபத்தில் கேட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபாபதி பத்மாவதி

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த காலஞ்சென்ற SPM. கனகசபாபதி (பிரபல வர்த்தகர் கண்டி, மாத்தளை) அவர்களின் அன்பு மனைவி பத்மாவதி (08 - 07 - 91) அன்று காலமாகி விட்டார் இவர் குமரகுரு, பாஸ்கரன், மோகனதாஸ் (K B M. Bros Kandy) Dr ரகுநாதன் (U K.), சுந்தரேசன் (GOPI TRADE CENTRE, MATALE), கிருபாவதி (U K.), ஆகியோரின் அருமைத்தாயாரும் ரஞ்சா, Dr ரம்யா, கௌரி, சற்குருநாதன் (Engineer U K), நந்தினி (ஆசிரியர், கொற்றாவத்தை) ஆகியோரின் அன்பு மாமியரும், லே. சிவஞானப்பிரகாசத்தின் அன்புச் சகோதரியும், லீலாலக்ஷ்மியின் மைத்துனியும், கீதா, சதிஷ், சுதா, தீபா, கவிதா, தர்ஷினி, கோபிநாத், கோகுலன், ஜனனி ஆகியோரின் பேர்த்தியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 09 - 07 - 91 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

மணல், வியாபாரிமூலை,
பருத்தித்துறை;

தகவல்:
குமர்குரு

[R/1535]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.